மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில் விரைவில் இதுகுறித்து பரிசீலனை செய்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சியில் பள்ளிச் சிறுமியை ஆசிரியர் கற்பழித்துள்ளது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 வயது பள்ளிச் சிறுமி ஆசிரியரால் கற்பழிக்கப்பட்ட ஒரு கொடூரமான சம்பவத்தை வேதனையோடு நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

விளவங்கோடு தாலுக்கா தேங்காய்ப்பட்டணத்தை அடுத்து இருக்கிற அம்சியில் டி. முருகேசனுடைய மகள் தனம் என்பவர் எஸ்.எம்.எஸ். ஆரம்பப்பள்ளியில் ஐந்தாவது வகுப்பு படிக்கிறார். அவள் 10 வயது பள்ளிச் சிறுமி. 22–3–1990 அன்று, வியாழக்கிழமை மாலையிலே அதே பள்ளியில் ஆசிரியராக இருக்கிற டி. நல்லதம்பி என்பவர் அந்தப் பள்ளிச் சிறுமியை நீ டியூசனுக்கு வா என்று சொல்லி, வீட்டுக்கு அழைத்துச் சென்று ஐந்தாம் வகுப்பு படிக்கின்ற அந்த 10 வயது பள்ளிச் சிறுமியைக் கதறக் கதற கற்பழித்திருக்கிறார்.

இதுகுறித்து மறுநாள், அவருடைய பெற்றோருடன் சென்று, பக்கத்தில் இருக்கிற காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டு இருக்கிறது. காவல் நிலையத்தார் அந்தப் பள்ளிச் சிறுமியினுடைய பாவாடை உள்ளிட்ட பல்வேறு தடயங்களைப் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பள்ளிச் சிறுமி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். இப்படி கற்பழிக்கப்பட்டது உண்மையான சம்பவமாக இருந்தபிறகும் கூட, அங்கேயிருக்கிற காவல் நிலைய அதிகாரிகள் அதைக் கற்பழிப்பு என்ற வகையில் முறையாக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக கற்பழிப்பு முயற்சி என்ற வகையில் அந்த வழக்கை ஓரளவு சமாளிப்பதற்கான நடவடிக்கையிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அந்த மாவட்டத்திலே இருக்கிற ஒரு வகுப்புவாத ஸ்தாபனத்தினுடைய தலைவராக இருக்கிற டி. நல்லதம்பி என்பவருக்கு அந்தப் பகுதியிலே இருக்கிற காவல் நிலைய அதிகாரிகள் மீது ஏற்கனவே இருக்கிற நெருக்கத்தின் காரணமாக இப்படி மறைமுகமாக அவர்களைத் தப்புவிக்கின்ற ஒரு முயற்சி நடப்பதாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கருதுகிறார்கள். இதுகுறித்து ஏற்கனவே அந்தப் பகுதியிலே இருக்கிற ஜனநாயக மாதர்சங்கம், அதை

போல அந்தப் பகுதியிலே செயல்படுகின்ற அம்சி அம்மன் தேவஸ்தானத்தைச் சார்ந்த பொதுமக்கள் எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசையும், அதிகாரிகளையும் வற்புறுத்தி பல்வேறு போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே முதல்வர் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், பெண்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நேரத்தில் பெண் குழந்தைகள் கொலை செய்யப்படக்கூடாது என்பதற்காக தகுந்த ஏற்பாடுகளை வேதனையோடு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய அரசு நடத்துகின்ற ஒரு இடத்திலே இப்படிப்பட்ட பள்ளிச் சிறுமி ஒருவர் அவருடைய ஆசிரியராலே கற்பழிக்கப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது. இது நம்மை எல்லாம் வெட்கப்படச் செய்யக்கூடிய, வேதனைப்படச் செய்யக்கூடிய, அரசுக்கு சவால் விடுகின்ற ஒரு செயல். ஆகவே இந்தச் செயலிலே ஈடுபட்ட ஆசிரியர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். காவல் துறை நடவடிக்கை மாத்திரம் அல்ல. அவர் ஆசிரியராக இருக்கின்ற பள்ளியில், நிர்வாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குத் துணை நின்று இருக்கக்கூடிய அதிகாரிகள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

10-30 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பாகச் சொல்லுவார், என்னிடத்திலே உள்ள விவரமான விளக்கத்தை அளிக்கலாம் என்றிருந்தேன். என்னிடத்திலே இருக்கின்ற விவரமான விளக்க அமைப்பையும் அவரே சொல்லிவிட்டிருக்கிறார். எனவே திரும்ப இந்த விஷயத்தைச் சொல்வதற்கு என் வாய் கூசுகிறது. இருதயம் கூட கூசுகிறது. இருந்தாலும்கூட இந்த நிகழ்ச்சியை யாரோ ஒரு வகுப்புவாதக் கட்சிக்கு அங்கே தலைவராக இருக்கின்றவரோடு போலீஸீக்குத் தொடர்பு இருக்கின்ற காரணத்தால்தான் அலட்சியப்படுத்தப்பட்டு விடும் என்கிற சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பினார். அந்த சந்தேகத்திற்கு எள் அளவும் இடம் இல்லாத அளவிற்கு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அவையிலே இந்தப் பிரச்சினை பேசப்பட்டது ஒன்றே அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அமையும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினருக்கும், அவைக்கும் அளித்து அமைகிறேன்.